00099

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2017/ 2018**
**EPD3232/ESD1132** – கலைத்திட்டக் கற்கையும் செயற்பாடும் அழகியல் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகள்
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
03 மணித்தியாலங்கள்

---

காலம் : பி.ப 02.00 – பி.ப 04.00 திகதி : 24.02.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

1. இளம் பிள்ளைகளின் நுண்ணியக்கத்திறன் விருத்தி நிலைகளை விபரிக்குக.

2. "பன்முக நுண்ணறிவு கொள்கை" யை சுருக்கமாக விளக்குக.

3. பிள்ளைகட்கு ஆரம்பக் காலங்களில் வெளிப்புற கற்றல் சூழல் இருப்பதன் அனுகூலங்கள் மூன்று (03) விளக்குக.

4. முன்பள்ளிக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் "பொம்மைகள்" பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக பகுப்பாய்வு செய்க.

5. இசையும் அசைவும் ஊடாக விருத்தி செய்யக்கூடிய திறன்கள் நான்கு (04) கூறுக.

6. குழந்தைச் சித்திரத்தின் பிரதான நிலைகளைக் கூறுக.

7. இளம் பிள்ளைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய நான்கு (04) வகை பொம்மைகள் பற்றி கூறுக.

8. முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வியில் "குழந்தை நாடகத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(5x8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (i) பிள்ளைகள் சங்கீதம் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களின் இயல்புகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

(ii) "பிள்ளைகள் புத்தாக்க செயற்பாட்டில் ஈடுபடும் போது அவர்கட்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்".
இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? இக்கூற்றை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

10. (i) முன்பள்ளி ஆசிரியரால், பிள்ளைகளின் பொருட்டு அழகியல் செயற்பாடுகள் திட்டமிடப்படும் போது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயங்கள் **நான்கை (04)** விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) முன்பருவப் பிள்ளைகளின் விருத்தியில் கதை கூறலும், நாடகமும் முக்கியத்துவம் வாய்ந்தவை. உதாரணங்களுடன் இக்கூற்றை ஆராய்க.

(12 புள்ளிகள்)

11. (i) புத்தாக்கச் செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள், இயற்கைப் பொருட்கள் **பத்தை (10)** பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வியில் கழிவுப்பொருட்களை புத்தாக்கச் செயற்பாடுகள் பொருட்டுப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக

(15 புள்ளிகள்)

12. (i) "இளம் பிள்ளைகளின் மனவெழுச்சிப் பின்புலத்தை இனங்காண்பதற்கு குழந்தைச் சித்திரம் பயன்படுத்தப்படலாம்".
இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ii) பிள்ளையின் குழந்தை சித்திரத்தை முன்பள்ளி ஆசிரியர் மதிப்பிடும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **மூன்றை (03)** விளக்குக.

(10 புள்ளிகள்)

13. (i) முன்பள்ளியிலும் ஆரம்பக்கல்வி வகுப்புகளிலும் கதைகூறல் மற்றும் நாடகம் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள்/ துணைகள் **ஐந்தை (05)** பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

(ii) கதைகூறல் மற்றும் நாடகத்தின் பொருட்டு மேற்கூறிய பொருட்கள்/ துணைகளை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*